பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம் நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆடி 20௨ (5—8—67) சனி ★ வெளியூர்: ஆடி 21௨ (6—8—67) ஞாயிறு [இதழ்: 45

துயர் தணிப்பு நிதி— ரூ. 15 இலட்சத்தைத் தாண்டியது!

சென்னை, ஆக. 5—

சென்னை நகரில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக முதலமைச்சர் திரட்டி வரும் நிதிக்கு ஆகஸ்டு 3-ம் நாள்வரை ரூ. 15,72,341.62 சேர்ந்துள்ளது.

★ துன்பமும் துயரமும் — நலிவும் மெலிவும் நீங்கிய எதிர்காலத்தைக் குழந்தைகள் உருவில் காண்கிறேன்!

★ நிலையான — அழியாத — விலைமதிக்க முடியாத செல்வத்தைத் தேடித் தரும் ஆசிரியர்கள் பாராட்டுதலுக்குரியவர்கள்!

கல்வியில் ஏழ்மைக்கு இடமில்லை

நகராட்சிமன்றங்கள்— நல்லெண்ணமுள்ளோர் கடமை

பொறுப்புணர்வுடன் மாணவர்கள் கல்வி கற்பது அவசியம்

சென்னை மாநகராட்சி இலவசப் பாடப் புத்தகம் வழங்கு விழாவில் முதலமைச்சர் அண்ணா தெளிவுரை

சென்னை, ஆக. 5—

"நமது வாழ்க்கையிலுள்ள துன்பமும் துயரமும் —நலிவும் மெலிவும் நீக்கப்பட்ட எதிர்காலத்தை, குழந்தைகளின் உருவில் காண்கிறேன்!

"ஒவ்வொரு பள்ளியிலும் நுழையும் பிள்ளைகள் கல்வி கற்று மருத்துவர்களாகவும், வழக்கறிஞர்களாகவும், நிர்வாக நிபுணர்களாகவும் மாறி வாழ்வில் ஏற்றம் பெறவேண்டும்!

"அந்தப் பிள்ளைகளின் மூலம்தான் நமது நாட்டிலுள்ள இருள் நீக்கப்படும்! கஷ்டநஷ்டங்கள் துடைக்கப்படும்!

"வயலுக்கு நாற்றங்காலில் பயிரை வளர்ப்பார்கள்! அதுபோல் எதிர்கால வயலுக்கு ஏற்ற நாற்றங்கால் பயிராக பள்ளிப் பிள்ளைகள் இருக்கிறார்கள்!

"நாற்றங்கால் பயிர், பார்ப்பதற்குப் பச்சைப் பசேல் என்று பசுமையாக இருப்பது மட்டுமல்ல—அதை நன்ருக வளர்த்து விரிவான வயலில்—முறையாக நட்டு ஒழுங்காக வளர்த்தால், தரமான பயன் கிடைக்கும்!

"அதுபோல், 'பள்ளிப் பிள்ளைகள்' எனும் நாற்றங்கால் பயிரை நன்ருக—முறையாக—ஒழுங்காக வளர்த்து வரும் ஆசிரியர்கள் இந்த நாட்டின் பாராட்டுக்குரியவர்கள்!

"இந்த நாட்டிற்கு நிரந்தரமான செல்வத்தைத் தேடித் தருபவர்கள் யாராவது இருக்கிறார்கள் என்ருல், அவர்கள், ஆசிரியர்கள்தான்!

"நிலையான செல்வத்தை—அழியாத செல்வத்தை விலை மதிக்கமுடியாத செல்வத்தைத் தேடித்தரும் ஆசிரியர்களை எவ்வளவு வாழ்த்தினுலும் தகும்!"

—இவ்வாறு அண்ணா அவர்கள், நேற்று நேரு விளையாட்டுத் திடலில் நடைபெற்ற—பள்ளிப் பிள்ளைகளுக்கு இலவசப் பாடப் புத்தகம் வழங்கு விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

விழாவிற்கு, கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தலைமை வகித்தார்.

விழாவிற்கு வந்திருந்தோரை மேயர் இரா.சம்பந்தம் வரவேற்ருர்.

விழாவின் நோக்கத்தைப்பற்றிய அறிக்கையை ஆணையர் அம்பாசங்கர் படித்தார்.

மாநகராட்சித் துவக்கப் பள்ளிகளைச் சேர்ந்த எல்லாக் குழந்தைகளையும் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 100 அரசு பஸ்கள் நேரு விளையாட்டுத் திடலுக்கு ஏற்றிச் சென்றன.

முதல் வகுப்பிலிருந்து 5-வது வகுப்பு வரையில் படிக்கும் குழந்தைகளுக்கு இந்தப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

பாடப் புத்தகங்களைத் தவிர இலவச நோட்டுப் புத்தகங்களும் வழங்கப்பட்டன.

அறிஞர் அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

மாநகராட்சியின் சாதனை பிறர் பின்பற்றத்தக்கது!

"பள்ளிப் பிள்ளைகளுக்கு இலவசப் புத்தகம் வழங்கும் விழாவை தமிழகத்தில் உள்ளோர் மட்டுமல்ல—துணைக் கண்டத்திலுள்ளோர் அனைவரும் கூர்ந்து கவனித்துப் பின்பற்றத்தக்கதாய் அமைத்திருக்கின்றனர்—மாநகராட்சியிலுள்ள நண்பர்கள்!

சென்னை மாநகராட்சி பல சாதனைகளைச் செய்து பிறருக்கு வழிகாட்டுவதுபோல், இந்தக் காரியத்திலும் பிறர் பின்பற்றத்தக்க முறையில் நடந்துகொண்டிருக்கிறது.

ஏக்கம் இருந்தாலும்....!

குழந்தைகளுக்குப் பாடப் புத்தகங்களையும் எழுதுகோல்களையும் தரும்போது, 'இவ்வளவு வசதியுடன் இருக்கும் காலத்தில் நாமெல்லாம் படிக்கவில்லையே' என்ற ஏக்கம் நமக்கு இருந்திருக்கலாம்; 'நமக்குக் கிடைக்காத நல்வாய்ப்பு நமது பிள்ளைகளுக்குக் கிடைத்திருக்கிறது' என்றுதான் நாம் பெருமைப்பட வேண்டும்.

'இந்த இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்குவதில் எவ்வளவு தொகை செலவாகியிருக்கிறது' என்பதைக் கவனிப்பதைவிட 'பள்ளிப் பிள்ளைகளின் கல்வியில் எவ்வளவு தூரம் மாநகராட்சி அக்கறை காட்டுகிறது' என்பதைக் கவனிக்க வேண்டும்.

நகராட்சிகளும் ஈடுபட முன்வரவேண்டும்

கல்வியறிவு பெறத் துடிப்போருக்கு — அவர்கள் ஏழைகள் என்பதால் கல்வி தடைப்படாமல் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டியது நல்லெண்ணமுள்ளோரின் கடமையாகும்.

'இதிலேகூட மாநகராட்சியிலுள்ள எனது நண்பர்கள் முந்திக் கொண்டார்களே' என்பதில் எனக்கு மகிழ்ச்சி உண்டு.

இந்த வழியைப் பின்பற்றி மற்ற நகராட்சிகளும்—தங்கள் வசதிக்கேற்ற அளவுக்கு ஏழை மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகம் அளிக்கும் பணியில் ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

உள்ளாட்சித்துறை அமைச்சர் முத்துசாமி பேசுகையில், பள்ளியில் பயிலச் செல்லும் பிள்ளைகளைப் பார்த்து நான் (அண்ணா) மகிழ்ச்சியடைவதாகக் கூறினார்கள். உண்மைதான்; எனக்குக் குழந்தைகளைப் பார்க்கும்போது எதிர்காலத்தையே பார்ப்பது போன்ற உணர்வு ஏற்படுவது உண்டு!

பொறுப்புணர்வுடன்...!

இலவசமாகப் புத்தகங்களை பெறும் பிள்ளைகளுக்கு ஒன்று கூறிக் கொள்வேன்—'ஏழ்மை நிலையிலும் பெற்றோர்கள் எவ்வளவோ இன்னல்களையும் தாங்கிக் கொண்டு நம்மைப் படிக்கவைக்கிருர்கள்' என்ற பொறுப்புணர்ச்சியுடன் நல்ல முறையில் நீங்கள் கல்வி கற்கவேண்டும்.

சீரிய முறையில்...!

ஆசிரியர்களுக்கு இந்த நேரத்தில் ஒன்று கூறிக்கொள்வேன்—எவ்வளவோ ஏழ்மை நிலையிலும் பிள்ளைகள் உங்களிடம் படிக்க வருகிருர்கள்; அவர்களின் ஏழ்மையைம் அறியாமையையும் போக்கும் விதத்தில் சீரியமுறையில் பாடங்களைக் கற்பிக்க வேண்டும்.

அவ்விதம் பாடங்களை ஆசிரியர்கள் கற்பித்து வருகிருர்கள் என்பதை இப்போதும் காண்கிறேன் —பெருமையடைகிறேன்.

பாராட்டுதல் உரித்தாகுக!

இலவசப் பாடப் புத்தகம் வழங்கும் விழாவை இவ்வளவு 'ஆர்வத்துடன் செய்து முடித்த மாநகராட்சின் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும், குழுக்களின் தலைவர்களுக்கும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நியாயமான உதவிகளைச் செய்யத் தயங்கேன்!

பாராட்டுதலுக்குப்பின் என்னென்ன பொருள் இருக்கும் என்பதை உணர்ந்துதான் பாராட்டுகிறேன். இந்த நல்ல காரியத்தைச் செய்து முடித்துவிட்டு மானியத்திற்கும் உதவிக்கும் அவர்கள் வருவார்கள்.

நிதி வசதி இடம் கொடுத்தால் நல்ல காரியத்தைச் செய்து முடிக்க மானியம் தருவதில்— உதவி தருவதில் தட்டாமல் செயல்பட நான் விரும்புகிறேன். குறிப்பாக மாநகராட்சியினர் வேண்டுகிற நியாயமான உதவிகளைச் செய்வதில் நான் தயக்கம் காட்டியதில்லை!

'நம் நாடு'
அடுத்த இதழில்
★
இடமாற்றமா?
மனமாற்றமா?
—உள்ளும் புறமும்

ஏனென்ருல், கொடுக்கப்படும் பணம் சீரான வழியில், மாநகராட்சியின் நிர்வாகத்தால் செலவிடப்படும் என்று நம்புகிறவன் நான்; அவர்கள் எவ்வளவு கேட்டாலும் கொடுப்பதற்கு விருப்பம் உள்ளவன் நான்; ஆனுல், கொடுப்பதிலும சில கட்டுத் திட்டங்கள் இருக்கின்றன.

நல்லெண்ணத்தை வழங்குகிறேன்

ஆகவே, அவர்களும் கேட்க வேண்டியதைத்தான் கேட்பார்கள்—நானும் கொடுக்கவேண்டியதைத்தான் கொடுப்பேன்!

ஆனுல் நல்லெண்ணத்தை வழங்குவதில் எந்த அளவும் இருக்க முடியாது; ஏனென்ருல், உலகிலேயே கேட்பதைவிட அதிகமாகத் தர முடிந்ததும்—கொடுப்பதைவிட அதிகமாக எடுக்க முடிந்ததும் நல்லெண்ணம் ஒன்றுதான்!

ஆகவே, அந்த நல்லெண்ணத்தை இந்த நல்ல வேளையில் தாராளமாக வழங்குகிறேன்."

இரா. நெடுஞ்செழியன்

விழாவிற்குத் தலைமை தாங்கிய இரா. நெடுஞ்செழியன் பேசுகையில், கல்லூரி மாணவர்களுக்கு—குறிப்பாகத் தொழில் கல்லூரி மாணவர்களுக்குப், 'புத்தகப் பாங்கி' ஏற்படுத்தி அதன் மூலம் புத்தகங்களை வழங்கும் இராஜஸ்தான் இளைஞர் சங்கத்தின் சீரிய முயற்சியைப் பாராட்டினார்: இதே போன்ற பணியை ரோட்டரி கிளப், லயன்ஸ் கிளப், மற்றும் இதர மாணவர் சங்கங்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பள்ளிக் குழந்தைகளுக்குச் சீருடை வழங்கும் திட்டத்தை நிறைவேற்றுமாறும் மாநகராட்சியை அவர் கேட்டுக்கொண்டார்.

மா. முத்துச்சாமி

உள்ளாட்சித்துறை அமைச்சர் மா. முத்துச்சாமி பேசுகையில், இலவசப் புத்தக வினியோகத் திட்டம் தமிழ்நாடு முழுவதற்கும் பயன்படுத்தப்பட வேண்டும் என்ருர்.

"கல்வியின் தரம் குறைவதற்கு ஆசிரியர்களை மட்டும் குறைகூறுவது தவருகும்; வறுமை காரணமாகப் புத்தகமின்றிப் பட்டினியுடன் வரும் குழந்தைகளுக்குக் கல்வியைக் கற்பிக்கும் அவர்களைப் பாராட்டவே வேண்டும்" என்று அவர் குறிப்பிட்டார்.

ஏ. கோவிந்தசாமி

"மொத்த மாணவர்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்காவது மதிய உணவு திட்டம் விரிவுபடுத்தப்படவேண்டும்" என்று விவசாயத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி கூறினர்.

"இதற்காக மாநகராட்சிக்குச் சொந்தமான நிலங்களில் நெல் காய்கறிகளைப் பயிரிடலாம்" என்ருர்.

அம்பாசங்கர்

மாநகராட்சி ஆணையாளர் அம்பாசங்கர், இந்தத் திட்டங்களின் நோக்கங்களை விளக்கினர்; '1-வது முதல் 5-வது வகுப்புவரையில் உள்ள 1,44,879 குழந்தைகள் இந்தத் திட்டத்தினுல் பயனடைகிருர்கள்; இதனுல் மாநகராட்சிக்கு ரூ. 5,64,925 செலவு ஏற்படுகிறது; நாட்டிலேயே சென்னை மாநகராட்சிதான் முதன்முதலாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறது' என்ருர்.

"மாநகராட்சியின் அச்சகத்திலேயே தயாரான 8 இலட்சம் நோட்டுகளும் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன.

மாநகராட்சியின் —குழந்தைகளுக்குச் சீருடை அளிக்கும் திட்டமும் பரிசீலனையில் இருந்துவருகிறது; அதற்கு ரூ. 6 இலட்சம் செலவாகும்' என்றும் ஆணையாளர் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தினுல் ஏற்படும் செலவைச் சரிக்கட்ட மானிய உதவி—கடனுதவிகளை அளிக்குமாறு அவர் அரசினரைக் கேட்டுக் கொண்டார்.

இரா. சம்பந்தம்

மேயர் இரா. சம்பந்தம் அமைச்சர்களை வரவேற்றுப் பேசுகையில், பள்ளிகளை நடத்துவதற்காக ஆகும் முழுச் செலவுகளுக்கும் மானிய உதவி தரப்படவேண்டும் என்ற தனது கோரிக்கையை வலியுறுத்தினர்.

துணை மேயர் கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினர்.

நம்நாடு

ஆசிரியர் : இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1998 ஆடி 20 (5—8—67) சனி

வெற்றிகரமான ஆரம்பம்

'பஸ் போக்குவரத்தை நாட்டுடைமையாக்க வேண்டும்' என்ற கொள்கையை, காங்கிரசுக் கட்சி சில ஆண்டுக் காலமாக முழங்கிவந்திருக்கிறது. இக்கொள்கையை நாள் தவருமல், மேடை தோறும் காங்கிரசுக் கட்சித் தலைவர்கள் திரும்பத் திரும்பக் கூறி வந்திருக்கின்றனர்.

ஆனல் சொல்லி வந்ததற்கேற்ப, பஸ்களை நாட்டுடைமை ஆக்குவதில் காங்கிரசுக் கட்சி, தேவையான அளவு அக்கறை காட்டவில்லை. இத்துறையில் தொடர்ந்தாற்போல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதை, காங்கிரசுக் கட்சி தள்ளிப்போட்டுக் கொண்டே வந்திருக்கிறது.

இதுதான், நாம் கண்டுவந்திருக்கும் நடைமுறை உண்மை. இத்துறையில் காங்கிரசுக் கட்சி காலங்கடத்தி வந்திருப்பதைக் கொண்டு, 'பஸ்களை நாட்டுடைமை ஆக்க வேண்டும்' என அக் கட்சி முழக்கமிட்டு வந்திருப்பதில், 'உண்மை இல்லை' என்பது விளக்கமாகிவிட்டது.

'நிறைவேற்ற வேண்டும்' என்ற கருத்தில்லாமல், காங்கிரசுக் கட்சி, அக்கொள்கையை ஏன் விளம்பரப்படுத்தி வரவேண்டும்? இக்கேள்விக்குரிய விடையைக் காண்பது மிகமிக எளிது!

பஸ் முதலாளிகளை மிரட்டி, அவர்களுடைய ஒருமித்த ஆதரவைத் தனது தேர்தல் வெற்றிக்குத் தேடிக்கொள்வதற்கே, பஸ்களை நாட்டுடைமையாக்கப் போவதாகக் காங்கிரசுக் கட்சி கூறிவந்திருக்கிறது. இதை மெய்ப்பிக்கத் தமிழகத்தின் கடந்த கால வரலாறே சான்று. இதுவுமன்றி, மேற்படி கொள்கையைத் தொடர்ந்து செயல்படுத்துவதில் காங்கிரசுக் கடசி கையாண்டு வந்திருக்கின்ற முறையும், காட்டிவந்திருக்கின்ற அலட்சியமும் மற்ருேர் சான்ருகும்.

ஆனல் இன்ருே, நிலைமை முழுவதும் மாறிவிட்டது. 'பஸ்களை நாட்டுடைமையாக்க வேண்டும்' என்ற இலட்சியத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்ற முன்னேற்றக் கழக ஆட்சியும், காங்கிரசுச் செயல் முறையை முன்மாதிரியாகக் கொள்ளாமல், மேற்படி இலட்சியத்தைச் செயல்படுத்துவதில் தீவிரமாகவும், ஆர்வத்துடனும் முனைந்திருக்கிறது.

கழக ஆட்சி மேற்கொண்டிருக்கின்ற இம்முயற்சி, இடையில் துவண்டுவிடாது—தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுவரும் என்பது உறுதியிலும் உறுதி.

பஸ்களை அரசாங்க உடைமையாக்குவதில், முதலமைச்சர் அண்ணு அவர்கள் காட்டிவருகின்ற ஊக்கத்தைக் குதைத்து மதிப்பிடுவதற்கில்லை. அரசாங்க பஸ் போக்குவரத்துத் துறையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற அமைச்சர் கருணுநிதி அவர்கள், இத்துறையில் காட்டிவருகின்ற விறுவிறுப்பும், மிகுதியான ஆரவமும் குறிப்பிடத்தக்க ஒன்ருகும்.

பஸ்களை அரசாங்க உடைமையாக்கும் கொள்கையைச் செயல்படுத்துவதில் கழக ஆட்சி வகுத்துள்ள முறையில், பஸ்களைத் தேசியமயமாக்கும் கருத்து மட்டுமே அடங்கி இருக்கவில்லை. தனியார் துறையுடன் அரசாங்கத் துறை போட்டியிடுகின்ற முறையையும், தமிழக அரசு ஏற்றுக்கொண்டு செயலாற்றிவருகிறது.

தனியார்—அரசாங்கத் துறை போட்டியின் விளைவாக, தனியார் துறை இதுவரை பிரயாணிகளிடம் வசூலித்துவந்த கட்டண விகிதத்தை முதன் முதலாகக் குறைத்திருப்பது சிந்திக்கத்தக்கது. போட்டியால் ஏற்பட்ட நற்பலன் இது. அரசியல் காரணத்துக்காகக் காங்கிரசுக் கட்சியினரின் பாராட்டு இதற்குக் கிடைக்கவில்லையானுலும், இதனல், பலனடைந்து வருகின்ற பொதுமக்களின் பாராட்டு, இதற்குக் கிடைத்துக்கொண்டுதான் இருக்கிறது.

கழக ஆட்சியின் தேசியமயக் கொள்கை பற்றிச் சட்டமன்றத்தில் அமைச்சர் கருணுநிதி அவர்கள் தந்திருக்கின்ற விளக்கத்துக்கேற்ப, இத்திங்கள் முதல் நாள்தொட்டு, சென்னைக்கும்—ஆரணிக்கும் சென்றுக்கொண்டிருந்த பஸ் போக்குவரத்தை, தேசியமயமாக்கும் முதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அம்முயற்சியின் ஆரம்பப் பணியாக சென்னையிலிருந்து ஆரணிக்குச் செல்லும் முதல் பஸ்ஸை, முதலமைச்சர் அண்ணு அவர்கள், இத்திங்கள் முதல் நாள் துவக்கிவைத்திருக்கின்ருர்.

இத்துவக்க விழாவில், எவருடைய பஸ்விடும் அனுமதி காலாவதியானதால் அரசாங்கம் ஏற்றுக்கொண்டதோ அந்த அனுமதியின் பலனை இதுநாள்வரை அடைந்துவந்திருக்கின்ற பஸ் உரிமையாளரான குடியேற்றம் இராசகோபால் (நாயுடு) அவர்களும், மேற்படி துவக்க விழாவில் கலந்துகொண்டிருக்கிருர். இவரைப் போன்றே, தமிழகத்திலிருக்கின்ற பெரிய பஸ் முதலாளிகள் பட்டியலில் இடம் பெற்றிருக்கின்ற மகாலிங்கம் அவர்களும், இவ்விழாவில் பங்குகொண்டிருக்கிருர்.

பஸ் போக்குவரத்தை அரசாங்க உடைமையாக்கும் தமிழக அரசாங்கக் கருத்துக்கு, பஸ் முதலாளிகளின் ஆதரவும் ஒத்துழைப்பும் இருக்கிறது என்தெற்கு, மேலே தந்திருக்கின்ற இரண்டு பஸ் முதலாளிகளும், ஆரணிக்கு அரசாங்க பஸ் விடுகின்ற துவக்க விழாவில் கலந்துகொண்டிருப்பதே போதுமானதாகும். இதனை, முதலமைச்சர் அண்ணுவின் அரும் சாதனைகளில் ஒன்ருகக் கொள்ளத்தான் வேண்டும்.

தமிழக அரசாங்கத்தின் இந்தத் தேசியமயமாக்கும் கொள்கையைப் பற்றி, பற்பலவிதமான பழிகள் சுமத்தக்கூடும் என்பது எதிர்பார்க்கக்கூடியதே! இப்பொழுதே, அரசியல் காழ்ப்பின் காரணமாகப் பழிசுமத்தப்பட்டும் வருகின்றன என்பதை மறப்பதற்கில்லை.

இத்தகைய பழிச்சொற்களுக்கு விடையும் விளக்கமும் தருகின்ற முறையில், இத்துவக்க விழாவில் ஆற்றிய முதலமைச்சர் அண்ணு அவர்கள், கருத்தறிவித்திருக்கின்ருர்.

"பஸ்களை நாட்டுடைமையாக்குவதென்பது—சில வட்டாரங்களில் பேசப்படுவதுபோல்—பஸ் முதலாளிகளிடம் கொண்ட பகையுணர்ச்சியினல் அவர்களிடமிருந்து பஸ்களை பறித்துக்கொள்ளுவதல்ல. மக்களின் தேவைகள் வளர்ந்துள்ள இக்காலத்தில்—அவற்றை நிறைவேற்ற—அத்தேவைகளின் வளர்ச்சிக்கேற்ப வரி விதிப்பை அதிகரித்துச் செல்லாமல், வேறு துறைகளிலும் அரசு தன் வருவாயைப் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்பதாலேயே, பஸ்கள் படிப்படியாக நாட்டுடைமையாக்கப்படுகின்றனது."

—கா. க.

சின்ன விஷயம்

கழுத்தை அறுக்காமல் இருந்தால் சரி!

கடந்த பொதுத் தேர்தல் நேரத்தில் காங்கிரசுக் காரர்கள் சொல்லிக்கொண்டிருந்தது நினைவிருக்கிறதா?—"நாங்கள்தான் தொழிலாளர்களின் அசல் தோழர்கள்! மற்றவர்கள் எல்லாம் போலிகள்! மக்களிடையே சமத்துவம் சுடர்விடப் பாடுபடுபவர் நாங்கள்தான்! எங்கள் இலட்சிய மூச்சே சனநாயக சோஷலிசம் தான்!"—இப்படியெல்லாம் சந்துமுனைகளில் முழங்கினுர்கள்!

இன்றைக்குக் காங்கிரசின் நிலை என்ன தெரியுமா?

தொழிலாளருடைய உண்மையான பிரச்சினைகள் என்ன? அவர்கள் சிக்கல்களுக்கு எப்படிப் பரிகாரம் தேடுவது? அவர்களுடன் எப்படி நெருங்கித் தொடர்பு கொள்வது—என்று ஆராய்ந்திட, காங்கிரசுத் தலைவர் காமராசர் ஓர் ஐவர் குழுவினை அமைத்திருக்கிருராம்!

குல்சாரிலால் நந்தா
ஜெகஜீவன் ராம்
கந்துபாய் தேசாய்
வி. வி. திராவிட்
எஸ். ஆர். வாசவதா

இந்த ஐவரும், மாநிலங்களைச் சுற்றிவருவார்களாம்! தொழிலாளர் பிரச்சினைகளை நேரடியாக அருகிருந்து ஆராய்வார்களாம்! இந்த ஐந்து பேர் உருவாக்கித் தருகிற 'சுவிசேஷ'ச் சேதிதான் மறைமொழியாய்க் கருதப்படுமாம்—காங்கிரசுக்காரர்களால்!

இந்தக் குழுவே அனைத்திந்தியக் காங்கிரசுச் செயற்குழுவின் பரிந்துரைப்படிதான் அமைக்கப்பட்டதாம்!

பொதுமக்களில் பெரும்பான்மையோர் இந்த தொழிலாளர் பட்டியலில் இருப்பவர்கள்தான்! இவர்கள் பிரச்சினைகளைக் குழு அமைத்துத் தான் புரிந்துகொள்ள வேண்டுமென்ருல்......

அந்த அளவுக்குப் பொதுமக்களுடைய தொடர்பை இழந்துவிட்டிருக்கிறது காங்கிரசு!

தொழிலாளர் பிரச்சினை என்று வந்தால்,முதலில் விலை உயர்வை ஒப்புக்கொள்ள வேண்டும்; பின்னர் அதனைத் தடுத்திட வழி கண்டாக வேண்டும்.

தொழிலாளரை மட்டுமன்றி அவர்கள் குடும்பங்களையே குட்டிச்சுவர்களாக்கும் குடிப்பழக்கம் பற்றித் தெளிவான முடிவுக்கு வந்தாக வேண்டும்.

அதைச் சமூகத் தீமை என்பார்களோ—பொருளாதாரப் பிரச்சினை என்பார்களோ—யாரே அறிவர் காங்கிரசின் சந்தர்ப்பவாதத்தை?

இவர்கள், எரிகிற வீட்டை அணைத்திட கிணறு வெட்டலாமா' என்று யோசித்து, நாள் பார்க்கிருர்கள்! காங்கிரசுக்காரர்கள் பழக்கமே அப்படித்தானே! ஆனல் ஒரு சந்தேகம்! காங்கிரசுக்காரர்கள் பொதுமக்களிடம் பழகுவதையே தரக்குறைவாகக் கருதுபவர்கள் ஆயிற்றே!

விமானக் கம்பெனி முதலாளிகள்—ஆலைச் சொந்தக்காரர்கள் — தொழிலதிபர்கள் — பஸ் முதலாளிகள்—கப்பல் வணிகர்கள் ஆகியோருடன் கைகோத்துப் பவனி வருவதுதானே அவர்களுக்குப் பழக்கம்? பின் எப்படி இவர்கள் தொழிலாளரோடு தொடர்பு கொண்டு பிரச்சினைகளை அறியப்போகிருர்கள்?

'வயிறு காய்ந்தால், குதிரை, வைக்கோலைக்கூடத் தின்னும்' என்பார்களே—அதுபோல், ஏற்பட்டு வருகிற சீரழிவு, காங்கிரசை இந்த வகையில் சிந்திக்க வைத்திருக்கிறது!

ஊரைச் சுற்ற வருகிற ஐவர் குழுப் பெருமக்கள், என்ன செய்வார்கள் என்று நினைக்கிறீர்கள்?—பெரிய பட்டணங்களில், கீர்த்திமிக்க ஓட்டல்களில்—குளிர் அறைகளில் தங்கியிருந்து, புள்ளி விவரங்களைச் சேகரிப்பார்கள்! வேறென்ன செய்வார்கள்? பொறுத்திருந்து பாருங்கள்!

மருமகள் செத்த ஆரும் மாதம் மாமியார் கண்ணில் கண்ணீர் வந்தமாதிரி, இப்போதாவது காங்கிரசாருக்குத் தொழிலாளர் நினைவு வந்ததே—மகிழ்ச்சிதான்!

தேனும் பாலுமாய்க் கூடிக்குலவி துணையாய் இருந்து, கடைசி நேரத்தில் கழுத்தை அறுக்காமல் இருந்தால் சரி!

—பூரணன்

வேளாண்மை நாடா உணவுக்கு கையேந்துவது?

"இந்தியப் பொருளாதாரமே விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டுதான் கட்டப்பட்டிருக்கிறது!

"அப்படிப்பட்ட நம்முடைய நாட்டின் அமைச்சர்கள், 'ஆஸ்திரேலியாவிலிருந்து கோதுமை வருகிறதா' என்று கடலை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கும் நிலைமை இருக்கிறது!

"உணவுக்காக வெளிநாட்டுக்கு 2 ஆயிரம் கோடி ரூபாயைக் கொட்டிக் கொடுத்திருக்கிருேம்!

"அந்நிய நாட்டுக்கு இரண்டாயிரம் கோடி ரூபாய் கொட்டிக் கொடுத்தவர்கள் ஓர் ஆயிரம் கோடி ரூபாயாவது நம்முடைய நாட்டு விவசாயிக்குக் கொடுத்திருந்தால், இப்படி உலகமெல்லாம் பிச்சையெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது.

"'இந்த உணவுக்காக அந்நிய நாடுகளிடம் கையேந்தும் நிலையைவிட அவமானம் வேறு உண்டா?' என்று பண்டித நேருவைக் கேட்டபோது, அவரே. 'ஆமாம்; அவமானம்தான்' என்ருர்! விவசாய நாடு இந்தியா! அப்படிப்பட்ட நாட்டினர், உலகத்திடம் உணவு கேட்பதை விடக் கேவலம் வேறில்லை!

"இந்தியாவுக்கு ஆகாய விமானம் வேண்டுமென்று கேட்கலாம்—அதிலே நியாயமிருக்கிறது! கப்பல்கள் வேண்டுமென்று கேட்கலாம்—அந்தத் துறையிலே இன்னும் நாம் தேர்ச்சிபெறவில்லை என்பதால்! ஆனல், 'சோறு போடு' என்ரு அந்நியரிடம் கேட்பது?"

---முதலமைச்சர் அண்ணு

(மன்னுர்குடி விவசாயிகள் கருத்தரங்கில்)

முதலாண்டிலேயே பெரும் இழப்பு!

ஜெய்ப்பூர், ஆக. 4—

மாநில அரசுக்குச் சொந்தமான இராஜஸ்தான் அரசு ஓட்டல் கழகத்திற்கு—அது தொடங்கப்பட்ட முதல் ஆண்டில், ரூ. 2,63,000 இழப்பு ஏற்பட்டது.

கணக்கு வைக்கும் முறையையும். நிதி விதி முறைகளையும் நிர்வாகத்தினர் பின்பற்றவில்லை" என்று இக்கழகத்தின் விவகாரங்களை ஆராய்ந்த பிறகு தணிக்கை அதிகாரி கூறினுர்.

விவசாயிகட்குத் திருப்தி ஏற்பட வேண்டும்

'விவசாயிகளுக்குத் திருப்தி ஏற்பட்டாலன்றி—அவர்கள் வாழ்வில் நிம்மதி ஏற்பட்டாலன்றி—அவர்களின்உழைப்பு, வயிற்றுப் பாட்டுக்கு வழி செய்தாலன்றி—முன்னேற்றம் அடைந்ததாகக் கூறிவிட முடியாது!

"மனித சக்திக்குத்தான் முதலிடம் தரவேண்டும்; மனித சக்தியை வீணுக்காமல் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்; உழைப்பாளர்களுக்கு நொந்த நிலை ஏற்படாமல் பார்த்துக் கொள்வதோடு, அவர்களுக்கு நிலச் சொந்தக்காரர்கள்—முதலாளிகள் ஊதியத்தைத் தாராளமாகக் கொடுக்க முன்வர வேண் வேண்டும்.

"விவசாயிகளைத் திருப்தியோடு வைத்துக்கொள்ள வேண்டும்; உரம் போட்டால் விளையாத நிலம்கூட அவன் உடலிலிருந்து விழும் வியர்வையால் விளையும்!

"உழைப்புக்கு மதிப்பளித்து வந்தால்தான் உற்பத்தி பெருகும்!

"'வீட்டுத் தோட்டத்தில் மாட்டுக் கொட்டகை போடு' என்று தொழிலாளிக்குச் சொன்னல், அவன் முணுமுணுத்துக் கொண்டே போவான்; ஆனல், 'மகளுக்குத் திருமணம்; மணப் பந்தல் போடவேண்டும்' என்ருல், அவனே முன்வந்து போடுவான்!

"'ஆத்திரத்துக்குச் சாத்திரமில்லை; பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்று பெரியோர் சொல்வார்கள்! ஆகவே, உழவர்களைப் பசியின்றி செய்துவிட்டுப் பாருங்கள்—உற்பத்தி பெருகும்!"

---முதலமைச்சர் அண்ணு

பஞ்சாலைத் தொழில் எதிர்பட்டுள்ள நெருக்கடிநிலை

மூடப்பட்ட ஆலைகளைத் திறக்கத் தமிழக அரசின் முயற்சி

ஆய்வுக் குழு பரிந்துரைகள் மீது நடவடிக்கை

சென்னை, ஆக. 3—

கடந்த இரண்டாண்டுக் காலத்தில் நாடு முழுவதிலும் பஞ்சாலைத் தொழில், கடுமையான பின்னடைவைக் கண்டுள்ளது. தமிழகத்தில் பல ஆலைகள் மூடப்பட்டுவிட்டன; சில, மூடப்படும் நிலைமையில் இருக்கின்றன. நிதி நிலை நெருக்கடியே இதற்கு முக்கிய காரணம்.

நெருக்கடி முற்றவே, புதிய அரசு, தான் பதவியேற்றதும்' பஞ்சாலைத் தொழிலுக்கு உதவும் வழிவகைகளைக் கண்டறிவதற்காக ஆலை நிர்வாகத்தினர்—தொழிலாளர் பிரதிநிதிகள் ஆகியோருடன் பல தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தியது.

மூடப்பட்ட ஆலைகளை மீண்டும் திறப்பதற்கும், நலிந்த நிலையில் ஆலைகள் மூடப்படுவதைத் தவிர்ப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்காக, டாக்டர் பி. எஸ். லோகநாதன் தலைமையில் முத்தரப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது; அக்குழுவில், ஆலை நிர்வாகத்தின் பிரதிநிதிகள் ஐவரும்—தொழிலாளர் பிரதிநிதிகள் ஐவரும்—கணக்கீட்டு நிபுணர் ஒருவரும்—தொழில்நுட்ப வல்லுநர் ஒருவரும் இடம் பெற்றனர்; கைத்தறி இயக்குநர், அதன் அமைப்பாளர் ஆவார்.

குழு இரண்டு இடைக்கால அறிக்கைகளை அளித்தது; அந்தப் பரிந்துரையின் அடிப்படையில் 15 ஆலைகளுக்கு மொத்தம் ரூ. 110.78 இலட்சம் வழங்குமாறு—கடன் தரும் வர்த்தகப் பாங்கிகளுக்கு உறுதிமொழியளித்து—தமிழக அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

மூன்று ஆலைகளுக்கு உதவி எதுவும் அளிக்க அரசு மறுத்துவிட்டது; 'இந்த மூன்று ஆலைகளுக்கும் அளிக்கப்படும் எந்த உதவியும், அவற்றைத் திரும்ப இயங்கச் செய்ய உதவாது' என்று, குழு கருத்துத் தெரிவித்ததையொட்டியே அவற்றுக்கு உதவியளிக்க அரசு மறுத்துவிட்டது.

அரசு உதவிக்கான உறுதிமொழிப் பத்திரத்தைச் செயல்படுத்துவதற்கு முன்னால், சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடக்க ஆலைகள் ஒப்பவேண்டும்.

ஆலைகளின் இயக்குநர் குழுவுக்கு அரசுப் பிரதிநிதி ஒருவரையும்—பாங்கிப் பிரதிநிதி ஒருவரையும் நியமிக்க ஒப்பவேண்டும் என்பதும், அரசு நியமிக்கும் தொழில் நுட்ப—பொருளாதாரக் குழு அவ்வப்போது பரிசீலனை செய்வதற்கு ஒப்பவேண்டும் என்பதும் முக்கிய நிபந்தனைகளாகும்.

இது சம்பந்தமாக ஆலைகளின் ஒப்புதலைப் பெற்று—அரசு சார்பில் உறுதிமொழிப் பத்திரத்தைச் செயல்படுத்தும் அதிகாரத்தை, கைத்தறி இயக்குநருக்கு அரசு அளித்துள்ளது.

அரசு உறுதிமொழியின் அடிப்படையில் வர்த்தகப் பாங்கிகளிடமிருந்து பணம் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளை உடனடியாகக் கவனிக்கும்படி ஆலைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

இப்பொழுது அரசு அளித்துள்ள உறுதிமொழி உதவி, எல்லா ஆலைகளும்: அவசியமான நிதியுதவி பெற்று, தாமதமின்றி இயங்குவதற்கு உதவியாக இருக்கும் என்று அரசு மனப்பூர்வமாக நம்புகிறது.

நிலப் படத்தில் ஆக்கிரமிப்பு

ஒரு நாட்டிற்குச் சொந்தமான நிலத்தின்மீது ஆக்கிரமிப்பு (Cartogrphical agression) நடத்துவது வரலாற்றில் அவ்வப்பொழுது நடைபெறும் ஒரு நிகழ்ச்சி.

உலகத்தின் மிக உயர்ந்த சிகரமும் நேபாளத்தின் எல்லைக்கு உட்பட்டதுமான 'மௌண்டு எவரெஸ்டை' பாட்னாவிலுள்ள 'ஒரு நிறுவனம், தான் வெளியிட்டுள்ள நில வரைப் படத்தில் இந்தியாவின் பகுதியாகக் காட்டியுள்ளதாக நேபாள அரசு, அந்த நிறுவனத்தின்மீது பாய்ந்துள்ளது!

காஷ்மீரைப் பாகிஸ்தானிய இஸ்லாமியக் குடியரசின் பகுதியாகக் குறிப்பிடும் நில வரைப் படங்கள் வெளிநாடுகளில் வெளியாவதும் இந்திய அரசு அவற்றிற்குக் கண்டனக் குறிப்பு அனுப்புவதும் அவ்வப்பொழுது நடைபெறும் நிகழ்ச்சிகள்.

அண்மையில் நடைபெற்ற இஸ்ரேலிய—அராபியப் போரில் புகழிடம் பெற்ற அகாபா வளைகுடா, ஒரு காலத்தில் 'பாரசீக வளைகுடா' என்று அழைக்கப்பட்டுவந்தது. ஈரானியர்கள்—அராபியர்கள் இருவரும் இதன் மீது உரிமை கொண்டாடினர். ஈரானியர்கள் தங்கள் நில வரைப் படங்களில் இதனைப் பாரசீக வளைகுடா என்றும், அராபியர்கள் தங்கள் நில வரைப் படங்களில் அராபிய வளைகுடாவென்றும் குறிப்பிடத் தொடங்கவே, இருவரிடையேயும் பெருத்த சச்சரவு மூண்டுவிட்டது!

—'டெக்கான் ஹெரால்டு'

தென் மாநிலங்களுக்கிடையே இயற்கை வளப் பங்கீடு

"தமிழகம்—கேரளம்—கருநாடகம்—ஆந்திரம் ஆகிய நான்கு மாநிலங்களும் ஒன்றுபட்டு இயற்கை வளங்களைப் பங்கிட்டுக் கொள்ளுவதை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. ஒப்பந்தங்களில் தகராறுகள் இருக்காதென்றும் நம்புகிறேன்.

"கேரளத்துக்கும் தமிழ்நாட்டுக்கு மிடையே ஆனைமலை ஆறு நம் பகுதியில் பாய்ந்து வருகிறது; ஆனால் கேரளத்தில்தான் தேக்கம் இருக்கிறது. 'ஆனைமலை நீரை எங்களுக்கு விட்டுவிடுங்கள்' என்று நம்முடைய எஞ்சினீயர்கள் கேட்கிறார்கள்; உடனே கேரளத்துத் தலைமை எஞ்சினீயர், 'எங்களுக்கு வேண்டும்' என்கிறார்; நம்முடைய மாநிலத்துத் தலைமை எஞ்சினீயரின்கீழ் பணியாற்றியவர்தான் அவர்.

"ஆனால் மாநிலங்களின் முதலமைச்சர்கள், நமக்கு நன்மை செய்வதில் நல்ல கருத்தோடு இருக்கிறார்கள்.

"கேரளத்து முதலமைச்சரைச் சந்தித்தபோது, நான் அவரிடம், 'அரிசி கேட்கிறீர்கள்—தருகிறோம்; ஆனால் கடலில்போய் வீணாகும் கேரளத்துத் தண்ணீரை எங்களுக்குத் தாருங்கள்' என்று கேட்டுக் கொண்டிருந்தேன். கேரள அமைச்சர், 'தருகிறேன்' என்று கூறியதாகப் பத்திரிகைச் செய்தியொன்றைப் பார்த்தேன்.

அந்தச் செய்தி, செய்தியாளரின் ஆர்வத்தால் வெளியிட்டதாக இல்லாமல், உண்மையானதாக—ஆதாரபூர்வமாக அமையுமானால், தண்ணீரைப் பெற்றுக் கொண்டு அரிசியைத் தருவதற்கான பிரச்சினையில் நான் அக்கறை காட்டுவேன்.

"நான், கேரளத்துக்கு அரிசி உதவத் தயக்கம் காட்டமாட்டேன். அதேபோல், தமிழகத்துக்குத் தண்ணீர் தரக் கேரளம் தயக்கம் காட்டக் கூடாது!

"கிருஷ்ணா—பெண்ணாறு திட்டம் உடனடியாக முடிந்தால் காவிரித் திட்டமே தேவையில்லை. ஆனால் அது உடனடியாக முடிவதாகத் தெரியவில்லை. இதிலே சில சிக்கல்கள் இருப்பதால்தான் வீராணம் ஏரியிலிருந்தே தண்ணீர் கொண்டுவர இருக்கிறோம்.

"தஞ்சை மாவட்டமும், சிதம்பரமும், 'வீராணத்திலிருந்து நீர் எடுப்பதன் மூலம் பாதிக்கப்படும்' என்றார்கள். சிதம்பரம் பகுதியிலேயுள்ள பெரிய மிராசுதார்கள் எல்லாம் சென்னையில் என்னுடன் கலந்து பேசினர்; எஞ்சினீயர்களுடனும் பேசியதற்குப் பிறகு அவர்கள் திருப்தியோடுதான் சென்றிருக்கிறார்கள்.

வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் எடுக்கிறோம் என்றால், வீராணத்துக்கு என்று தண்ணீர் கிடையாது; வீராணம், ஒரு பாத்திரம் போன்றதே தவிர, அதிலே ஊற்று இல்லை! அதிலே தண்ணீர்விட்டு, தேவைப்படும்போது எடுத்துக் கொள்கிறோம்; குழாய்கள் மூலம் எடுத்து சென்னை மக்களுக்குப் பயன்தரச் செய்யவிருக்கிறோம்.

"விவசாயத்திற்குத் துளியும் பாதகமில்லாமல் — தஞ்சை, சிதம்பரத்திற்குப் பாதகம் ஏற்படாமல்—வீராணம் ஏரித் திட்டம் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

"ஒருவரைக் கெடுத்து, இன்னொருவரை வாழவைக்க நானென்ன அவ்வளவு பைத்தியக்காரனா? யாரையும் கெடுக்கவேண்டும் என்ற நோக்கம் எனக்கில்லை. ஒருவரின் தேவைக்குப் போக மீதமுள்ளதை மற்றவர்களுக்குத் தந்துதவும் திட்டம்தான் இது!"

---முதலமைச்சர் அண்ணா

(மன்னார்குடி விவசாயிகள் கருத்தரங்கில்)

எல்லாப் பெயர்ப் பலகைகளும் தமிழில்!

உள்ளாட்சி மன்றங்களுக்கு அரசு ஆணை

சென்னை, ஆக. 4—

உள்ளாட்சிமன்ற அலுவலகங்களிலும், அவை நடத்தும் நிறுவனங்களிலும் வைக்கப்படும் பெயர்ப் பலகைகள் ஒரே சீராக இருப்பதற்காக, பெயர்ப் பலகைகள் தமிழில்தான் இருக்கவேண்டும் என்றும், ஆங்கிலப் பெயர்களுக்குப் பின்னரும் தமிழ்ப் பெயர்களைத்தான் பயன்படுத்த வேண்டும் என்றும் அரசு ஆணைபிறப்பித்துள்ளது:—

முனிசிபாலிட்டி:—நகராட்சி
முனிசிபல் கவுன்சில்:—நகராட்சி மன்றம்
பஞ்சாயத்து யூனியன்;—ஊராட்சி ஒன்றியம்
பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்:—ஊராட்சி ஒன்றியக் குழு
பஞ்சாயத்து டவுன்:—பேரூராட்சி
டவுன் பஞ்சாயத்து:—பேரூராட்சிமன்றம்
பஞ்சாயத்து வில்லேஜ்:—ஊராட்சி
வில்லேஜ் பஞ்சாயத்து:—ஊராட்சிமன்றம்
டவுன் ஷிப்:—நகரியம்
டவுன் ஷிப் கமிட்டி;—நகரியக் குழு

இது சம்பந்தமாக உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி மேற்பார்வையாளர், கிராம வளர்ச்சி இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

உள்ளாட்சி மன்றங்களிடமுள்ள ஜீப்கள், மற்ற வண்டிகள் மீது எழுதப் பெற்றுள்ள பெயர்களும் தமிழில் மாற்றப்பட வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளது.

ஆசிரியர்களிடம் அனுதாபம் கொண்டது இந்த அரசு

குறைகளை நீக்க இயன்றதையெல்லாம் செய்யும்

இராயபுரம் பள்ளி விழாவில் அமைச்சர் கருணாநிதி உரை

சென்னை, ஆக. 2—

"பள்ளியாசிரியர்கள்பால் அனுதாபம் கொண்டதுதான் இன்றுள்ள அரசு; ஆசிரியர்களின் குறைகளை நீக்கவேண்டும் என்ற எண்ணமும் அரசுக்கு உண்டு; நிதி வசதிதான் அதற்கு இடம் கொடுக்கவில்லை; எனினும், முடிந்தவரையில் ஆசிரியர்களின் குறைகளைப் போக்கவும், கோரிக்கைகளை நிறைவேற்றவும் அரசு தயங்காது"

என்று, பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், இராயபுரம் தூய இராயப்பர் உயர்நிலைப் பள்ளியில் பேசுகையில் தெரிவித்தார்.

சென்னை—இராயபுரம் தூய இராயப்பர் உயர்நிலைப் பள்ளியின் இலக்கிய மன்றத் துவக்க விழாவும்—திருவள்ளுவர் விழாவும்—ஆசிரியர் கழகத் துவக்க விழாவும் இன்று மாலை 5-மணியளவில் நடைபெற்றது.

மாணவர் இருவர் முறையே ஆங்கிலத்திலும், தமிழிலும் வரவேற்புரை நிகழ்த்தினர்.

புலவர் தியாகராசன் பேசுகையில், 'தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப் படியும், ஓய்வு நாள் சலுகையும், மற்றவர்களுக்குத் தரப்படுவதுபோலவே தரப்பட வேண்டும்' என்றார்.

மறைத்திரு. தனிஸ்லாஸ் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மக்கள்பால் கருணை கொண்டவரும், 'மக்கள் ஆதரவு' எனும் நிதியுடையவருமான அமைச்சர் கருணாநிதி அவர்கள் இங்கு வருகை தந்திருக்கிறார்.

பள்ளிகளில்தான் குறள் மொழியைப் போதிப்பது என்ற நிலையை மாற்றி, பஸ்களிலும குறளைப் பரப்பியவர் அமைச்சர் கருணாநிதி."

குறைகளை அகற்றச் செயலாற்றும் அரசு!

அடுத்து அமைச்சர் கருணாநிதி அவர்கள் பேசும்போது மழை பெய்துகொண்டிருந்தது; அது பற்றித் தமது பேச்சின் துவக்கத்தில் அவர் குறிப்பிட்டதாவது:—

"சிலப்பதிகாரக் காவியம், 'மாமழை போற்றுதும் — மாமழை போற்றுதும்' என்றுதான் துவங்குகிறது. அதுபோல் இந்தப் பள்ளியின் இலக்கியத் துவக்க விழாவும், மழையில், 'மாமழை போற்றுதும் — மாமழை போற்றுதும்' எனக் கூறத்தகும் அளவில் துவங்கப்படுகிறது.

ஆசிரியப் பெருமக்களின் குறைபாடுகள் பற்றி புலவர் தியாகராசன் அவர்கள் குறிப்பிட்டார். நான் கல்வித் துறைக்கு அமைச்சர் அல்ல என்றாலும் இந்தக் குறைகளைக் கல்வி அமைச்சரிடம் எடுத்துரைக்கும் தற்காலிகக் தபால் அமைச்சராகப் பணியாற்ற வேண்டியிருக்கிறது.

'ஆசிரியர்களுக்குக் குறைபாடுகள் இருக்கின்றன; அவை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும்' என்பதை அறிந்து செயலாற்றுகிறது. இந்தப் புதிய அரசாங்கம்!

இப்படி ஆசிரியர்களின் குறைபாடுகளை அரசாங்கம் அறிந்திருப்பதே ஒரு சுப அடையாளமாகும்!

'ஆசிரியர்களுக்குக் குறைபாடுகளே இல்லை' என்று கருதிய காலம் போய்விட்டது! 'ஆசிரியர்களுக்கும் குறைபாடுகள் உண்டு; அவை நீக்கப்பட வேண்டும்' எனக் கருதிப் பாடுபட்ட இயக்கத்தைச் சார்ந்தவர்கள் அமைத்த புதிய அரசு இது!

உடனடியாக அந்தக் குறைபாடுகள் நீக்கப்படாவிடினும், உரிய நேரத்தில் முடிந்த அளவு நீக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'ஆசிரியர் சார்பாக எடுத்துச் சொல்லப்படுகின்ற குறைபாடுகளில் அக்கறை உண்டு' என்று கூறுகிற அதே நேரத்தில், 'குறைகளை நீக்குகிற வகையில், இந்த அரசுக்கு உங்கள் ஒத்துழைப்பு மிகவும் தேவை' என்பதை வலியுறுத்திக் கூறிக் கொள்கிறேன்.

இன்றைய மாணவர்கள்தான் நாளைய அரசாங்கத்தின் அங்கங்களாகவும், அறிவாயுதங்களாகவும் விளங்க இருப்பவர்கள்!

அந்த அங்கங்களுக்குப் பலமூட்டவும், அறிவாயுதங்களுக்குக் கூர் ஏற்றவுமான பணியை இந்த இலக்கிய மன்றங்கள் செய்ய வேண்டும்.

இலக்கிய மன்றங்கள் பேச்சாற்றலை மட்டுமல்லாமல், கருத்துக்களை உணர்ந்து கொள்ளவும், அந்தக் கருத்துக்கள் மூலம் வாழ்க்கையில் வளம் பெறவுமான வழியை உருவாக்க வேண்டும்.

ஆரம்பப் பேச்சாளனுக்குத் துணிவும், அனுபவம் பெற்ற—ஆற்றலுள்ள பேச்சாளனுக்குப் பணிவும் மிகவும் தேவை!

இந்த இலக்கிய மன்றங்களும், அவை வளர்க்கும் உணர்வும் நமது தாய்மொழியைப் பேணி வளர்க்க பாதுகாக்கப் பயன்பட வேண்டும்."

இறுதியில், ஆசிரியர் ஆனந்தன் நன்றி கூறினார்.

முன்னேற்றச் சங்கச் சாதனை

கோவை ராதிகாமில்லில் கடந்த 1965-ம் ஆண்டு சனவரித் திங்களில் வேலை நிறுத்தம் நடைபெற்றது. கோன் வைண்டிங் பழனிச்சாமி உடல்நலம் பாதிக்கப்பட்டு இ.எஸ்.ஐ. லீவில் இருந்துவந்தார்; ஆனால் மில் நிர்வாகத்தினர், எல்லாத் தொழிலாளிகளிடத்திலும் 8 நாள் சம்பளம் பிடித்தம் செய்தார்கள்; மேற்படி தொழிலாளிக்கும் 8 நாள் கூலி பிடித்தம் செய்தார்கள்.

இது சம்பந்தமாக முன்னேற்றச் சங்கச் சார்பில், தொழில்துறை அதிகாரி முன்பு 23—4—67 அன்று வழக்குத் தொடரப்பட்டது; 16—6—67 அன்று விசாரணை நடைபெற்றது; அதுபோது இ. எஸ். ஐ. லீவில் இருந்ததற்கு ஆதாரங்களின் நகல் கொடுத்ததன் பேரில் மேற்படி தொழிலாளிக்கு 8 நாள் சம்பளத்தைத் திருப்பித் தர நிர்வாகிகள் இசைந்தார்கள்.

கிராமப்புற வாழ்க்கைச் செலவு

தமிழகத்தில் பல்வேறு இடங்களுக்கான கிராமப்புறவாழ்க்கைச் செலவுப் புள்ளி வருமாறு:—

புலியூர் (தென் ஆற்காடு):- 931.
அகரம் (தென் ஆற்காடு):- 888.
துலாயநத்தம் (திருச்சிராபள்ளி): 898.
எரியோடு (மதுரை): 874.
கோகிலாபுரம் (மதுரை): 964.
கிணத்துக்கடவு (கோயம்புத்தூர்): 806.
கூடுவாஞ்சேரி (செங்கற்பட்டு): 854.
குன்றத்தூர் (செங்கற்பட்டு): 797.

நடக்க இருப்பவை -- பொதுக்கூட்டங்கள்

6--8--67

மேலக்கடையநல்லூர்

அறிஞர் அண்ணு மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு வள்ளுவர் திடலில்; தலைவர்: ச. சுப்பையா; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., சி. நடராசன், எஸ்.வி. சம்சுதீன், உசேன்.

குடந்தை

தமிழக அரசு தொழில்துறை பித்தளைத் தொழிலகத் தொழிலாளர் சங்க முதலாவது ஆண்டு விழா; மாலை 6 மணிக்கு மூர்த்தி கலை அரங்கில்; தலைவர்: எம். கணேசன்; பேசுவோர்: என். கிட்டப்பா எம்.எல்.ஏ., என். காசிராமன் எம்.எல்.ஏ., கோ.சி. மணி, ஏ.வி. இராமசாமி, ஏ.ஆர். இராமசாமி, எஸ்.ஆர். இராதா, வி. குருசாமி.

தே. கல்லுப்பட்டி

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு பாலகுரு திடலில்; தலைவர்: எஸ்.எஸ். மணி; பேசுவோர்: வி. தவமணி எம்.எல்.ஏ., எஸ்.வி. இளங்கோவன். (மணி—சாமி குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

மதுரை

13-வது வட்டாரம் தியாகி சின்னசாமி நினைவு மன்ற இரண்டாம் ஆண்டு விழா; மாலை 7 மணிக்கு பச்சை நாச்சியம்மன் கோயில் தெருவில்; தலைவர்: தி. இளங்கோவன; பேசுவோர்:ஏ.பி. சனார்த்தனம் எம்.ஏ., சி. கோவிந்தராசன் எம்.எல்.ஏ., கு. திருப்பதி பி.ஏ.,பி.எல்., எம்.எம். முத்தரசு, அ. சின்னக்காளை.

அருப்புக்கோட்டை

24-வது வட்டம் எம்.ஜி.ஆர். மன்றச் சார்பிலும், 17.வது வட்டம் இளைஞர் எம்.ஜி.ஆர். மன்றச் சார்பிலும் மாலை 6 மணிக்கு வெள்ளைக்கோட்டை தெற்கு ரத வீதியில்; தலைவர்: சிவகாமி சண்முகசுந்தரனார்; பேசுவோர்: குன்னத்தூர் க. அன்புரசு, இரத்தினம், சிவ. சண்முகசுந்தரனார், இரா. செல்லையா, புரட்சிக்காளை.

7--8--67

கரூர் 3-வது வட்டம்

சின்னச்சாமி மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு; தலைவர்: கே. ஆர். குண்டுமணி; பேசுவோர் ; வெ. கண்ணன், குளித்தலை முத்துகிருஷ்ணன், என். ஆர். இராமசாமி, பரமத்தி சண்முகம், கே. ஜி. உமாகாந்தன், மற்றும் பலர்.

வில்லூர்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு ; தலைவர் : எம். மயில்சாமி ; பேசுவோர் : எஸ். வி இளங்கோவன், தி. பெருமாள். (மணி—சாமி குழுவினரின் பல குரல் கலை நிகழ்ச்சி நடைபெறும்)

இலுப்பூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு ;சின்னக் கடை வீதி திடலில்; தலைவர் : டி. பெருமாள் ; பேசுவோர் : அமைச்சர் எஸ். ஜே. சாதிக்பாட்சா பி,ஏ., பி.எல்., வீ. சா. இளஞ்செழியன் பி.ஏ.,பி.எல்., சி. மதிமாறன், எல். என். ஏ. அஜீஸ், இ. நூர் முகமது.

கோவை 4-வது வட்டம்

தியாகி சின்னச்சாமி மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு இராமநாதபுரம் பள்ளி திடலில் ; பேசுவோர் : ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., சே. அ. இராசமாணிக்கம், ப. கோபால், மற்றும் பலர்.

திட்டக்குடி

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு அண்ணு திடலில்; மலேசியா சென்று திரும்பிய என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்களுக்குப் பாராட்டு; தலைவர் : ஆ. கிருட்டினன் எம்.எல்.ஏ.; பாராட்டுவோர் : எஸ். பி. பச்சையப்பன் எம்.எல்.ஏ., இரா. நாராயணன் எம்.எல்.ஏ., டி. கேசவலு எம்.எல்.ஏ., இரா. சோமசுந்தரம் எம்.ஏ.,பி.எல்., க. இராமலிங்கம் பி.ஏ.,பி.எல்., மற்றும் பலர்.

8--8--67

வன்னிவேலம்பட்டி

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு பொது மைதானத்தில் ; தலைவர் : பூ. வீ. பெரியணன் ; பேசுவோர் : எஸ். வி. இளங்கோவன், ச. தனகோடி, எஸ். இராமையாதாசன், எஸ். எஸ். சங்கர். (மணி—சாமி குழுவினரின் பல குரல் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

சென்னை 88-வது வட்டம்

எம். ஜி. ஆர். பகுத்தறிவு மன்றத் திறப்பு விழா ; இரவு 7-மணிக்கு ஆழ்வார்பேட்டை தெருவில் ; தலைவர் : சு. பெ. நீலகண்டன் ; திறப்பாளர் : ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ.; பேசுவோர் : கா. வேழவேந்தன் பி.ஏ.,பி.எல் , எம்.எல்.ஏ., துரைமுருகன் பி.ஏ., இரா. சடகோபன் எம்.சி., வ. புருடோத்தமன் எம்.சி., க. இளமதி. ஆ. துரை.

திருவரங்கம்

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு சீரங்கம் சாத்தார வீதியில்; தலைவர் ; எஸ். எம். வி. சாமி ; பேசுவோர் : அமைச்சர் மா. முத்துச்சாமி பி.ஏ.பி.டி., அ. பெ. தர்மலிங்கம், வி. எம். கணேசன், ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., சு. நெடுமாறன், தா. துரைசாமி, மு. நடராசன் மற்றும் பலர்.

ஆயுள் காப்பீட்டுக் கழக ஏஜெண்டுகள் சங்கக் கூட்டம்

ஆயுள் காப்பீட்டுக் கழக ஏஜெண்டுகளின் சங்கச் செயற்குழுக் கூட்டமும், இந்திய தென் பகுதிக் குழுக் கூட்டமும் 5-8-67-ல் முறையே காலை 10 மணிமுதல் பகல் 1 மணி வரையிலும், மாலை 3 மணிமுதல் இரவு 8 மணிவரையிலும், சென்னை, கோவிந்தப்ப நாயக்கன் தெருவிலுள்ள சௌந்தரிய மகாலில் நடைபெறும்.

சிதம்பரத்தில் சட்ட அமைச்சர் செ. மாதவன் நிகழ்ச்சிகள்

6-8-'67 ஞாயிறு மாலை 3-மணிக்கு சிதம்பரம் வழக்கறிஞர் மன்றத்தில் வரவேற்பு; அண்ணுமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. பி. சந்திரா(ரெட்டி)தலைமை வகிக்கிறார் ; தென்னாற்காடு மாவட்ட நீதிபதி திரு. பி. எஸ். சோமசுந்தரம் மறைந்த துணை நீதிபதி இராமமூர்த்தியின் படத்தைத் திறந்து வைக்கிறார்.

மாலை 5 மணிக்கு, சிதம்பரம் வட்டத் தொழிலாளர்கள் சார்பில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு டி.ஆர். விசுவநாதன் தலைமையில் வரவேற்பு.

இரவு 7 மணிக்கு, மாணவர் இராசேந்திரன் நினைவு மன்ற ஆண்டு விழாப் பொதுக்கூட்டம்.

நிகழ்ச்சிகளில் வழக்கறிஞர் தில்லை வில்லாளன், சாம்பசிவம், பொன். சொக்கலிங்கம், புலவர் ஆறுமுகம், வழக்கறிஞர்கள் தில்லை மறைமுதல்வன், ஏ. சி. வைத்திலிங்கம், பா. ம. நடேசன், இரா. சக்கரவர்த்தி, இரா. க. சீனுவாசன், மற்றும் பலரும் கலந்துகொள்வர்.

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் சுற்றுப்பயணம்

ஆகஸ்டு

7 : காலை 9-30 மணி : திருச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளல் ; மாலை 3 மணி : திருச்சியில் காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில் கலந்துகொள்ளல் ; இரவு 7-30 : மணி ஒரத்தநாடு—மகளிர் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டல்.

8 : காலை 9-30 மணி : திருச்சி—மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு ; மாலை 5 மணி : அம்பியல் மேல்நகர் (திருக்காட்டுப் பள்ளி சமீபம்) பஞ்சாயத்து ஒன்றிய ஆரம்பப் பள்ளிக் கட்டிடத் திறப்பும், இதர நிகழ்ச்சிகளும்.

9, 10 : காலை 9-30 மணி : திருச்சி—மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு; மாலையில் திருச்சி மாவட்டப் பகுதிகளில் சுற்றுப் பயணம்.

11 : மாலை 3 மணி : குற்றாலம்—மாநில சமய ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளல் ; மாலை 5 மணி : குற்றாலம் பராசக்தி கல்லூரி முத்தமிழ் விழாவில் கலந்துகொள்ளல் ; இரவு 7 மணி : தென்காசி—பொதுக்கூட்டம்.

12 : காலை 10-30 மணி : குற்றாலம்—சமய, அறநிலையத் துறை அதிகாரிகள் மாநாட்டில் கலந்துகொள்ளல் ; மாலை 6 மணிமுதல் இரவு 10 மணிவரை : ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதியில் சுற்றுப்பயணம் — தொகுதி உறுப்பினர் ஏற்பாடு செய்துள்ளபடி.

13 : காலை 11-30 மணி : திருநெல்வேலி—மின்துறை ஊழியர்கள் சங்க ஆண்டு விழாவில் கலந்துகொள்ளல் ; பிற்பகல் 1 மணி : அரம்பொலி ஊழியர்களுக்கான பயிற்சி வகுப்புக்களை ஆரம்பித்தல் ; பிற்பகல் 2-30 மணி : குமரி மாவட்ட ஆசிரியர்கள் கூட்டணி மாநாட்டில் கலந்துகொள்ளல் ; 3-30 மணி : இந்து கல்லூரி மாணவர் மன்றத்தின் கூட்டத்தில் சொற்பொழிவு ; மாலை 4-15 மணி : வேட்டூர்ணிமடம் — குமாரசாமி கல்லூரி துவக்கம் ; மாலை 5-30 மணி : சுச்சிந்தரம் ஊராட்சி நிகழ்ச்சிகள் ; இரவு 7 மணி : நாகர்கோவில்—பொதுக்கூட்டம்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து சுற்றுப்பயணம்

ஆக. 7 : திருச்சி—மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை அதிகாரிகள் மாநாடு; இரவு 7-30 மணி : அந்தநல்லூர்—பொதுக்கூட்டம் ;

ஆக. 8 : திருச்சி—மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு ; மாலை 6-30 மணி : அனைத்திந்திய கலை, தொழில் கண்காட்சியில் நாடகத் தலைமை ;

ஆக. 9 : திருச்சி—மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு ; மாலை 6-30 மணி : சங்கிலியாண்டார் குப்பம் பொதுக்கூட்டம்; இரவு 8 மணி : துவாக்குடி பொதுக்கூட்டம் ;

ஆக. 10 : திருச்சி—மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு ; மாலை 5-மணி : பொன்மலைப் பட்டி ஊராட்சி வரவேற்பு ; இரவு 7-மணி : மேலகற்கண்டார் கோட்டை பொதுக்கூட்டம் ;

ஆக. 11 மாலை : குற்றாலம்—நகரக் கண்காட்சி ;

ஆக. 12 காலை 10 மணி : பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றிப்பு வரவேற்பு ;

திருச்சியில் கலை நிகழ்ச்சி

காவேரி நூற்பாலைத் தொழிலாளர்களின் குடும்ப நிவாரண நிதிக்குத் திருச்சி தேவர் மன்றத்தில், 6—8—67 மாலை 5-மணிக்கு திருச்சி மாவட்ட தி.மு.க. செயலாளர் அன்பில் தர்மலிங்கம் தலைமையில் சிவகங்கை சேதுராசன் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்; நன்கொடை : ரூ. 1; 50 காசுகள், சிறுவர்கட்கு 25 காசு.

சென்னைத் தீ விபத்து நிவாரணக் குழுவினர் அளிக்கும் திரைப்பட விழா

ஆகஸ்டு 6-ந்தேதி முதல் 20-ந்தேதி வரையில்

சென்னை பாலர் அரங்கத்தில்

ஒவ்வொரு தினமும் வெவ்வேறு படங்கள் காண்பிக்கப்படும். சிறந்த படங்களை தினமும் கண்டுகளிக்க இது ஒரு அரிய சந்தர்ப்பம்.

தினசரி 2 காட்சிகள் { முதல் காட்சி மாலை 2-30 மணிக்கு
இரண்டாம் காட்சி மாலை 6 மணிக்கு

ஆக. 6, 13, 15, 20 தேதிகளில் இரவு 9-30 மணி காட்சி உண்டு.

தினமும் மாலை 6 மணி காட்சிக்கு மாண்புமிகு அமைச்சர்களும், சினிமா நட்சத்திரங்களும், முக்கிய தலைவர்களும் தலைமைவகிப்பர்.

★

தினமும் திரையிடப்படும் படங்கள் விவரம்

தேதி	கிழமை	படம்	தலைவர்
6-ம்	ஞாயிறு	'தோஸ்தி'	திரு. கிருஷ்ணமூர்த்தி (துணை மேயர்)
7-ம்	திங்கள்	'பச்சை விளக்கு'	திரு. சோ
8-ம்	செவ்வாய்	'மணிமகுடம்'	திரு. எஸ்..எஸ்.. ராசேந்திரன்
9-ம்	புதன்	'பூம்புகார்'	மேயர் திரு. சம்பந்தம்
10-ம்	வியாழன்	'மறக்கமுடியுமா'	திருமதி இராஜசுலோசனு
11-ம்	வெள்ளி	'அன்னை'	திரு. கே. ஏ. மதியழகன்
12-ம்	சனி	'குழந்தையும் தெய்வமும்'	திரு. சாதிக் பாட்சா
13-ம்	ஞாயிறு	'செம்மீன்'	திரு. மு. கருணநிதி
14-ம்	திங்கள்	'காஞ்சித் தலைவன்'	திரு. அசோகன்
15-ம்	செவ்வாய்	'அன்பே வா'	திரு. ஏ. கோவிந்தசாமி
16-ம்	புதன்	'நாடோடிமன்னன்'	திரு. மா. முத்துசாமி
17-ம்	வியாழன்	'நவராத்திரி'	திரு. இரா. நெடுஞ்செழியன்
18-ம்	வெள்ளி	'திருவிளையாடல்'	திரு. எஸ். பி. ஆதித்தனார் செல்வி காஞ்சனு
19-ம்	சனி	'சர்வர் சுந்தரம்'	திரு. எஸ். மாதவன்
20-ம்	ஞாயிறு	'எங்கவீட்டுப்பிள்ளை'	திரு. பி. மருதப்பிள்ளை

நுழைவுக் கட்டணம்: ரூ. 3, 2, 1. சீசன் டிக்கெட் ரூ. 25.

(ஆக. 4-ந்தேதிமுதல் காலை 10-மணியிலிருந்து பாலர் அரங்கில் டிக்கெட் விற்கப்படும்)

இந்தத் திரைப்பட துவக்க விழாவை

மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் **அறிஞர் அண்ணு** அவர்கள் 1967 ஆகஸ்டு 6-ந்தேதி காலை 9-15 மணிக்கு மவுண்ட் ரோடு சபையர் தியேட்டரில், ராஜேசுவரி பிக்சர்ஸ் அளிக்கும் 'தோஸ்தி' (இந்தி) படத்துடன் துவக்கிவைப்பார்கள்.

இந்தக் காட்சிக்கு மட்டும் நுழைவுக் கட்டணம் ரூ. 2; 1.35

குடும்பத்தோடு ஒருமித்து வந்து கண்டு களித்து தீயால் பாதிக்கப்பட்டோர் வாழ உதவி செய்யுங்கள்.

டாக்டர் சத்தியவாணிமுத்து,
தலைவர், சென்னை தீ விபத்து நிவாரணக் குழு

அமைச்சர் மா. முத்துச்சாமி சுற்றுப்பயணம்

ஆகஸ்டு

7, 8, 9 : திருச்சி—கலெக்டர்கள் மாநாடு.

9 : மாலை 6 மணி : சேலம்—கதர், கைத்தறி பொருட்காட்சி.

10 : காலை 9-30 மணி : திருச்சி—கலெக்டர்கள் மாநாடு.

11 : குமரி மாவட்டத்தில் சுற்றுப் பயணம்.

12 : காலை 10 மணி : கள்ளிகுளம் ஊராட்சி வரவேற்பு ; 11 மணி : சமூகரங்கபுரம் ஊராட்சி வரவேற்பு; பகல் 12 மணி. கஸ்தூரிரங்கபுரம் ஊராட்சி வரவேற்பு ; மாலை 3 மணி : திசையன்விளையில் வரவேற்பு ; மாலை 5 மணி: கடையநல்லூர் நகராட்சி மன்றக் கட்டிடத் திறப்பு விழா நிகழ்ச்சி ; மாலை 6-30 மணி : குற்றாலம்—நகரக் கண்காட்சி.

13 : நாமக்கல் பகுதி நிகழ்ச்சிகள்.

திருச்சி நகர தி.மு.க. செயலாளர்-பிரதிநிதி கூட்டம்

"6—8—67 காலை 10 மணியளவில், அரண்சாலை தமிழ்ச் சங்கக் கட்டிட மாடியில், நகர கழகச் செயலாளர்—'பிரதிநிதி கூட்டம்' நடைபெறும்" என்று நகர தி. மு. க. செயலாளர் அ. நடராசன் அறிவிக்கிறார்.

Madras State Electricity Board

Madurai Electricity System

TENDER NOTICE

SEALED tenders are invited for the Construction of a shed for storing fly ash at Pasumalai S. S., Madurai District upto 3 P.M. on 18—9—67. The same will be opened at 4.00 P.M. on 18—9—67.

The tender specification and drawing may be obtained from the undersigned on production of the receipt for the payment of Rs 15.38 (Rupees fifteen and paise thirty eight only) either in cash or money order to the Chief Accountant, Madurai Electricity system, Madurai-7. The amount cannot be refunded on any account.

It is not binding on the department to accept the lowest or any tender.

Tender specification will be available for sale from 4-9-67.

SUPERINTENDING ENGINEER

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.